**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – 2022-2023 - 22 அரசு பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் 1053 மாணாக்கர்களுக்கு தன்சுத்தம், உடல் நலம் பராமரிப்பதற்காக, சோப்பு, தேங்காய் எண்ணெய் வழங்குவதற்கான இதர செலவினம் ரூ.30/-லிருந்து ரூ.50/-ஆக உயர்த்தி வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1)த் துறை**

அரசாணை (நிலை) எண் 6

நாள்: 16 .05.2022
சுபகிருது, வைகாசி– 12
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 1914, சமூக நலத் துறை, நாள் 28.07.1988.
2. அரசாணை (நிலை) எண் 154, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(ச.ந,9) துறை, நாள் 13.08.2003.
3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 4842/சி.ப.2/2021, நாள் 22.04.2022.

-----

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.04.2022 அன்று 2022-2023ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது இன்ன பிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> "22 அரசு பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் 1053 மாணாக்கர்களுக்கு தன்சுத்தம், உடல் நலம் பராமரிப்பதற்காக வழங்கும், சோப்பு, தேங்காய் எண்ணெய் வழங்குவதற்கான இதர செலவினம் ரூ.30/-லிருந்து ரூ.50/-ஆக உயர்த்தி ரூ.2.52 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்."

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் விடுதிகளில் தங்கிப் பயிலும் சிறப்புப் பள்ளி தொழிற் பயிற்சி பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் மாணவ,

(த.பி.பா.)

மாணவியருக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/-வீதம் சோப்பு மற்றும் தேங்காய் எண்ணைய் வாங்கி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், காது கேளாத, பார்வையற்ற கடும் ஊனமுற்ற மற்றும் மன வளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளிலும், மறுவாழ்வு இல்லம் மற்றும் தொழிற் பயிற்சி கூடங்களிலும் தங்கி பயிலும் இல்லவாசிகளுக்கு சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் வாங்கி வழங்கிட நபர் ஒன்றுக்கு மாதம் ரூபாய் 20/-லிருந்து ரூ.30/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் 22 அரசு சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு வருவதாகவும், இச்சிறப்புப்பள்ளிகளில் நடப்பு கல்வியாண்டில் 1053 மாணவ / மாணவியர்கள் விடுதிகளில் தங்கி கல்வி பயின்று வருவதாகவும், இவர்களின் தன்சுத்தம் மற்றும் உடல் ஆரோக்கிய பராமரிப்பிற்காக சோப்பு, எண்ணெய் கொள்முதல் செய்ய இதர செலவினங்களுக்கான தலைப்பில், ஒரு நபருக்கு மாதம் ரூ.30/- வரை செலவு மேற்கொள்ளப்படுவதாகவும், நடைமுறையில் இதற்கான செலவு மிகுதியாக ஏற்படுவதால் இத்தொகையினை ரூ.50/- ஆக உயர்த்தி அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் 1053 மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.52 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதாகவும், இதனால், தொடர் கூடுதல் செலவினம் ரூ.2,52,720/- ஆகும் எனத் தெரிவித்து, இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் திட்ட அனுமதி வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, இத்துறையின் கீழ் உள்ள 22 அரசு சிறப்புப்பள்ளிகள் நடப்புக் கல்வியாண்டில், விடுதிகளில் தங்கி, கல்வி பயின்று வருகின்ற 1053 மாணாக்கர்களின் உடல் நலம் பராமரிப்பதற்காக சோப்பு, தேங்காய் எண்ணெய் வழங்குவதற்கான இதர செலவினத் தொகையினை ரூ.30/-லிருந்து ரூ.50/-ஆக உயர்த்தி வழங்கி, இக்கூடுதல் தொடர் செலவினமாக தேவைப்படும் தொகையான ரூ.2.52 இலட்சத்தினை, 2022-2023ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.13.26 இலட்சம் நிதியொதுக்கத்திலிருந்து மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

[த.பி.பா.]

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 – சமூக நலன்-101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்- AA – பார்வையற்றோர் பள்ளி -324 – பொருள்கலும் வழங்கலும் - 01 – பொருட்களும் வழங்கலும்.

[IFHRMS த.தொ.கு.2235 – 02 – 101 – AA – 32401] "

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 24072/நிதி(சந)/2022, நாள் 16.05.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆர். லால்வேனா,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்</u>:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்** 16/05/2022